


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 123வது பிறந்தநாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு. செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், தி. வேல்முருகன், சபா. ராஜேந்திரன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து சிதம்பரத்திற்கு நேற்று முன்தினம் (14.7.2025) இரயிலில் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வழியனுப்பி வைத்தனர்.

## ஓசாகாவில் நடைபெறும் ‘எக்ஸ்போ 2025’ல் தமிழ்நாடு பெவிலியன் திறப்பு!

## திராவிட மாடல் முதலமைச்சர் முன்னிலையில்

# ஜப்பான் நிறுவனங்களால் போடப்பட்ட ஒப்பந்தங்கள் 100% முதலீடுகளாக மாறியுள்ளன!

## தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

ஒசகா, ஜூலை 16-

தமிழ்நாடு அரசின் தொழில்துறையினருடன் ஜப்பான் நாட்டிற்குச் சென்றுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

நமது Team TamilNadu ஒரு மிக முக்கியமான பயணத்தைத் தொடங்கியுள்ள இந்த தருணத்தில், கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பான் பயணத்தின் போது நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் 100% முதலீடுகளாக மாற்றப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.



இதுவரை இல்லாத சாதனையாக, ஒப்பந்தங்களை முழுமையான முதலீடுகளா கவும், தமிழ்நாட் டிற்கான வேலை வாய்ப்பாகவும் மாற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது!

ஜூலை 14 அன்று ஜப்பானின் முக்கிய நகரமான ஒசாகாவில் நடைபெறும் உலக எக்ஸ்போ 2025இல் இந்தியா பெவிலியனுக்குள் அமைந்துள்ள தமிழ்நாடு பெவிலியனை திறந்து வைத்து நமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம். தமிழ்நாடு பெவிலியன் நம் மாநிலத்தின் மரபு, வளம், தொழில்துறையிலுள்ள முன்னேற் றம் ஆகிய அனைத்தையும் கொண்டாடும் ஓர் அர்ப்பணிப்பாகும்.

இந்நிகழ்வில், தமிழ்நாட்டின் பண்பாட்டு ஆழமும், எதிர்கால இலட்சியங்களும் மிக வலிமையாக எதிரொலித்ததுடன், நமது பாரம்பரியக் கலை வடிவங்களான பறை, பரதநாட்டியம், சிலம்பம் மற்றும் அடிமுறை ஆகியவை நிகழ்த்தப்பட்டன. ஒசாகாவில் சிறந்த ஏற்பாடுகளை செய்து தந்த திரு. சந்துரு அப்பர் அவர்களின் அருமையான ஆலோசனைகளுக்கும் உதவிக்கும் எங்களது நன்றியை தெரி வித்துக் கொள்கிறோம்

இந்தப் பயணத்தின் போது, நமது நீண்டகால தொழிற்கூட்டாளிகளான எஹைம் மற்றும் ஹிரோஷிமா பகுதிகளுடன் மேலும் வலுவான ஒத்துழைப்புகளை விரிவு படுத்தவும், புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயவும், எதிர்கால தொழில் துறைகளுக்கான ஒத்துழைப்புகளை ஏற்படுத்தவுமான செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்களின் வ்ழிகாட்டுதலுடன் தமிழ்நாடு அரசின் தொழில்துறை மேற்கொள்ளவிருக்கிறது.

தொழில்துறை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் வேகமாகவும் முனைப்போடும் நகர வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் தெளிவான வழிகாட்டுதலின் வெளிப்பாடாக ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிவிட்டுள்ளார்.

## 10 ஆயிரம் முகாம்கள்!

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ - ஒரு புரட்சிகரத் திட்டம்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 16 -

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “உங்களுடன் ஸ்டாலின்” ஒரு புரட்சிகரத் திட்டம் - என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**நாளை (அதாவது ஜூலை 15 ) தொடங்குகிறது ஒரு புரட்சிகரத் திட்டம்!**

**அரசு அலுவலகங்களை நீங்கள் நாடிச் செல்லாமல், உங்கள் வீடுகளுக்கே விண்ணப்பங்களைக் கொண்டு வந்து கொடுத்து அதனைப் பெற்றுத் தீர்வு காண்பதுதான் உங்களுடன் ஸ்டாலின்!**

**10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன. இது குறித்து மேலும்**



**விவரித்திருக்கிறார் அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா அவர்கள்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



காட்டூர் பகுதி செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான நீலமேகம் இல்ல காதணி விழாவானது காட்டூர் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பின் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், தமிழக துணை முதல்வரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்த காதணி விழாவில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, எம்.பி.சிவா, மாநகர செயலாளர் – மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பகுதி செயலாளர்கள், காட்டூர் பகுதி வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் .



திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக பெருந்தலைவர் கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான நேற்று திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள காமராசரின் திருவுருவச் சிலைக்கு திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையையும் நோட்டுப் புத்தகங்களையும் வழங்கினார் . இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜ், மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர் மோகன், மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைத்து அணியை சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில் டெல்டா மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், முதன்முறையாக சிந்தடிக் ஓடுதளம் மற்றும் மின்னொளி விளக்கில் நடைபெற்ற தடகள போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை தமிழ்நாடு தடகள சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவரும், மாவட்டப் பொறுப்பாளரும் சட்டப்பேரவை உறுப்பினருமான சாக்கோட்டை க.அன்பழகன், தமிழ்நாடு தடகள சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் டி.கிருஷ்ணசாமி வாண்டையார் ஆகியோர் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கினர்.உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் டேவிட் டேனியல், தஞ்சாவூர் தடகள சங்கத்தின் செயலாளர் ஜி.செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.